உ

திருக்கோணமலை – பாலையூற்று

# அருள்மிகு ஸ்ரீ பாலமுருகன் தேரடிச் சிந்தும் காவடிப்பாடல்களும்



ஆக்கம்: கவிஞர்-சோதிடர்

வி. சிகண்டிதாசன்

வெளியீடு:- 20-05-2016

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

பாலமுருகன் துணை

திருக்கோணமலை பாலையூற்று

அருள்மிகு ஸ்ரீ பாலசுப்பிரமணியப் பெருமான்

# தேரடிச் சிந்தும் காவடிப் பாடலும்

வெளியீடு

பாலையூற்று

அருள்மிகு ஸ்ரீ பாலசுப்பிரமணியப் பெருமான்

தேவஸ்தானம்-திருக்கோணமலை

20-05-2016

இந்நூலுக்காக நீங்கள் வழங்கும் நிதிகள் யாவும் அருள்மிகு பாலசுப்பிரமணியப் பெருமான் ஆலய திருப்பணி வேலைகளுக்கு பயன்படும் என்பதை அறியத்தருகின்றோம்

ஆக்கம்

கவிஞர் சோதிடர் வி. சிகண்டிதாசன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நூல் விபரம்

நூலின் பெயர்:- திருக்கோணமலை பாலையூற்று அருள்மிகு ஸ்ரீ பாலசுப்பிரமணியப் பெருமான் தேரடிச்சிந்தும் காவடிச்சிந்தும் பாடலும்

நூலாசிரியர்:- கவிஞர் - சோதிடர். வி. சிகண்டிதாசன்

நூல் வகை:- பக்தி இலக்கியம்

வெளியீடு:- திருக்கோணமலை பாலையூற்று அருள்மிகு ஸ்ரீ பாலசுப்பிரமணியப்பெருமான் -தேவஸ்தானம்

காலம்:- 2016-05-20

பக்கம்:- 22

பதிப்புரிமை:- நூலாசிரியர்

பிரதிகள்:- 500

விலை:- 100/-

அச்சிட்டோர்:- சக்தி அச்சகம், திருக்கோணமலை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

பாலமுருகன் துணை

# வேதாகம குருவேந்தன் ஷாஹித்ய பாஸ்கரன் ஷப்தரிஷி குருபீடாதிபதி

# தசமான்ய சிவஸ்ரீ குமார விக்னேஸ்வரக் குருக்கள்

## ஆசியுரை

இப்பிரபஞ்சத்தில் படைத்தல், காத்தல், அழித்தல், அருளல், மறைத்தல் எனும் ஐந்தொழில்களைக் கொண்டு உலகை இயக்கும் இறைவனுக்கு செய்யப்படும் விழாவில் மகோற்ஷவம் மிகவும் முக்கியம் வாய்ந்தது. கொடியேற்றம் முதல் பூங்காவன உற்சவம் வரை இந்த ஐந்தொழில்களையும் நினைவு கூருகின்ற உற்சவங்களாகும். இத்தொன்மைப்பாடு உற்ஸவத்தில் தேர் உற்ஸவம் மேலும் சிறப்புப் பெறுகிறது. இவ் உற்ஸவத்தில் பாடப்படுகின்ற **"தேரடிச்சிந்து"** கவிஞர் ஜோதிடர் திரு. வி. சிகண்டிதாசன் அவர்களால் இயற்றப்பட்டு மலர்வடிவில் வெளிவருவதையிட்டு பெருமகிழ்ச்சி அடைவதுடன் எம்மதமும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மதம்சார் கலைகளும், கலாசாரங்களும் காப்பாற்றப்பட்டு பேணி பாதுகாக்கப்பட வேண்டிய கட்டாயத்தையும் இவ்விடத்தில் பதிவு செய்து சைவமும், தமிழும் தளைத்தோங்கி மக்களிடையே புரிந்துணர்வும் ஆலய நிர்வாக பரிபாலகரர்களையும் பாராட்டி அவர்தம் சேவைகள் மென்மேலும் தொடரவும் ஆலயம் வளர்ச்சி பெறவும் சமூக ஒற்றுமை ஓங்கவும், முருகன் அருள் கிடைக்க வேண்டி பிரார்த்தித்து ஆசி வழங்கியமைகின்றேன்.

என்றும் இறைபணியில்

**ஷாஷித்ய பாஸ்கரன்**

***தேசமான்ய சிவஸ்ரீ குமாரவிக்னேஸ்வரக் குருக்கள்***

(யாழ் வட்டுக்கோட்டை)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாலமுருகன் துணை

# ஆலய குருவின் ஆசியுரை

பல வருட காலமாக இவ்வாலயத்தில் ஸ்ரீ பாலமுருகப் பெருமானுக்கு பூசை செய்யும் பாக்கியம் பெற்ற பெருமை உடைய நான் இவ்வருடம் பிரம்மோற்சவ விஞ்ஞாபனத்தில் எம் பெருமானுக்கு பாடப்படுகின்ற தேரடிச்சிந்து கவிஞர் ஜோதிடர்திரு. வி. சிகண்டிதாஸன் அவர்களால் இயற்றப்பட்ட தேரடிச்சிந்துப்பதிகம் வெளிவருவதையிட்டு மகிழ்வதுடன் அவருக்கும் அவர் குடும்பத்துக்கும் எம்பெருமானின் ஆசி கிடைக்க வேண்டும் என்று பிரார்த்தித்து மேலும் இவ்வாலயம் மென்மேலும் தொடரவும் ஆலயம் வளர்ச்சி பெறவும் முருகப்பெருமானின் அருள் கிடைக்க வேண்டி பிரார்த்தித்து ஆசி வழங்கியமைகின்றேன்.

இங்ஙனம்,

ஆலய குரு

சிவஸ்ரீ ஸ்ரீகுகன் சர்மா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

பாலமுருகன் துணை

திருக்கோணமலை பாலையூ ற்று

அருள்மிகு ஸ்ரீ பாலமுருகன் ஆலய

நிர்வாக சபை

# வாழ்த்துரை

திருக்கோணமலை பாலையூற்று எனும் பதியிலே வீற்றிருந்து அருள்பாலிக்கும் கலியுகவரதன் வேலவப் பெருமானுக்கு 1993ம் ஆண்டு கும்பாபிஷேகம் நடைபெற்று அதனைத்தொடர்ந்து ஆலயத்தில் அலங்கார உற்சவம் இடம்பெற்று வந்த நிலையில் இரண்டாவது கும்பாபிஷேகத்திற்கு பின் அலங்கார உற்சவமாக நடைபெற்று வந்த திருவிழாக்கள் மகோற்ஸவமாக மாற்றம் பெற்று தோத்திருவிழாவும் சிறப்பாக நடைபெற்று வருகிறது. ஆரம்ப காலம் முதல் எம்பெருமானுக்கு தேர்த்திருவிழாவிற்காக பாடப்படும் தேரடிச் சிந்து எமது ஆலயத்திற்கு இல்லாத காரணத்தினால் இதுவரை காலமும் வேறு ஆலயங்களில் பாடப்படும் தேரடிச் சிந்துப் பாடலை பாடிவந்தோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த நிலையில் எம்பெருமானுக்கு என்று ஒரு தேரடி சிந்து தேவை எனக்கருதி எமது திருமலை மண்ணிலே உதித்த கவிஞர், சோதிடர் எனப்புகழ்பெற்ற திருவாளர் வி. சிகண்டிதாசன் ஐயா அவர்களை தொடர்பு கொண்டு எங்கள் ஆலயத்திற்கு ஒரு தேரடிச் சிந்து இயற்றித் தருமாறு வேண்டினோம். அவரும் எங்கள் வேண்டுகோளை ஏற்று இப்பெரும் பணியை ஆற்றித் தந்துள்ளார் அவருக்கு எல்லாம் வல்ல பாலமுருகப்பெருமான் என்றும் சகல சௌபாக்கியங்களையும் வழங்க வேண்டும் என்று ஆலய நிர்வாகத்தினரும் எமது பாலையூற்று அடியார்களும், பொதுமக்களும் எம்பெருமானை வேண்டுவதோடு தேரடிச்சிந்தும் காவடிப் பாடலும் வெளியிடுவதில் பெரும் மகிழ்ச்சி அடைகின்றோம்.

இவ்வண்ணம்
ஆலய நிர்வாக சபை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# என்னுரை

***நாட்டமுடன் வருவோர்க்கு நலங்கள் நல்கும்***
***நாயகனே உனதடியை நாடி வந்தேன்***
***பாட்டுறும் பாலையூற்றுப் பதியில் வாழும்***
***பாலசுப்பிரமணியப் பெருமானே அருள் செய்வாயே***

பாலையூற்று பதியில் அருள் பாலித்துக் கொண்டிருக்கும் பாலசுப்பிரமணியப் பெருமானுக்கு ஒரு தேரடிச்சிந்து தேவை என ஆலய பரிபாலன சபைத் தலைவர் என்னிடம் கேட்டுக்கொண்டதற்கு இணங்க எம் பெருமானின் திருவருள் கொண்டு தேரடிச்சிந்துப் பாடலை எழுதிக் கொடுத்தேன். அந்த ஒரு பாட்டையும் கொடிக்கவி, திருபொற்சுண்ணம் போன்ற பாடல்களையும் ஒன்றாக சேர்த்து ஒரு புத்தக வடிவமாக வெளியிட வேண்டும் என்று என்னிடம் கொண்டு வந்தார்கள் அவர்களின் முயற்சியை ஆண்டவனிற்காக பணிசெய்யும் ஆழமான எண்ணத்தையும், செயற்பாடுகளையும் கண்டு அளவற்ற ஆனந்தம் அடைந்தேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு சில பாட்டிற்காக ஒரு புத்தகத்தை உருவாக்குவது எனக்கு மன நிறைவான விடயமாக தென்படவில்லை இதற்காக எம்பெருமானுக்காக காவடிச் சிந்து பாடல்களை எழுதவேண்டுமென்று எண்ணிய மறு கணமே பாலையூற்று முருகன் பாடல்களை ஊற்றாக கொண்டு வந்து கொடுத்தான். ஒரு மணித்தியாலத்திற்குள் பதினொரு பாடல்களை எழுதி முடித்தேன், அவனருளாலே அவன்தாள் வணங்கி என்ற மணிவாசகப் பெருமானின் மணி மொழிகளுக்கமைய இப்பாடல்களை படைக்கும் பாக்கியம் அடியேனுக்குக் கிடைத்தது. இதைப் பாடுவோர்க்கும் பணிவோர்க்கும் பாலையூற்றுப் பாலமுருகன் திருவருள் கடாட்சம் கிடைக்கும் என்பதில் எவ்வித ஐயப்பாடுகளும் இல்லை.

இந்த நூலுக்காக ஆசியுரை வழங்கிய ***ஆலயகுரு சிவஸ்ரீ ஸ்ரீ குகன்*** ஐயா அவர்களுக்கும் வேதாகம குருவேந்தன் ஷாஹித்திய பாஸ்கரன் ஷப்தரிஷி குருபீடாதிபதிதேசமான்ய ***சிவஸ்ரீ குமார விக்னேஸ்வரக் குருக்கள்*** அவர்களுக்கும் எனது நன்றியையும், வணக்கத்தையும் தெரிவித்துக் கொள்வதோடு இப்பாடல்களை புத்தகமாக்கி வெளியிட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்வந்த ஆலய பரிபாலன சபைத் தலைவர் கௌரவ ச. பாக்கியராஜா அவர்களுக்கும், செயலாளர் கௌரவ மு.சதீஸ் அவர்களுக்கும், பொருளாளர் கௌரவ க. தங்கராசா அவர்களுக்கும் மற்றும் நிர்வாகத்தர்கள், தொண்டர்கள், அன்பர்கள், அடியவர்களுக்கும் எனது இதயம் கனிந்த நன்றியைத் தெரிவித்துக்கொண்டு எல்லாம் வல்ல முருகப் பெருமானின் திருவருள் எல்லோருக்கும் கிடைக்க வேண்டும் என்று பிரார்த்தனை செய்கின்றேன்.

**என்றும் இறைபணியில்**
**கவிஞர், சோதிடர்**
**வி. சிகண்டிதாசன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருக்கோணமலை பாலையூற்று
அருள்மிகு ஸ்ரீ பாலசுப்பிரமணியப் பெருமானின்

## தேரடிச் சிந்து

பாலையூற்றினிலே பாலசுப்பிரமணியப்
பெருமான் தேரில் வருகிறார் - அருள்மிகு
பெருமான் தேரில் வருகிறார்.

அப்பனும் அம்மையும் அருள்தரும் பூமியில்
செப்பிடும் செல்வங்கள் சேர்ந்த நற்பதியினில் (பாலை)

திருக்கோணமலையினிலே திகழ்ந்திடும் பாலையூற்றில்
திருவருள் புரிய வருகிறார் - முருகன்
திருவருள் புரிய வருகிறார்

செங்கதிர் வேலவன் செந்தமிழ் நாயகன்
கங்கை அணிந்தவன் கண்ணில் பிறந்தவன்
(பாலை)

சூரர் குலப்படையழித்த சுப்பிரமணியரவர்
தீரர் நலம் விளங்க வருகிறார் - எங்கள்
தீரர் நலம் விளங்க வருகிறார்

ஐங்கரன் தம்பியாய் அவனியில் வந்தவர்
பங்கைய மலரினில் பாலனாய் மலர்ந்தவர் (பாலை)

வண்ணமிகு தேரினிலே வள்ளி தெய்வானையுடன்
கண்ணன் திருமருகன் வருகிறார் - காக்கும்
கண்ணன் திருமருகன் வருகிறார்

இந்திரன் சேனையின் இன்னல் துடைத்தவன்
சந்ததம் எண்ணுவோர் சங்கடம் தீர்ப்பவன் (பாலை)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடியார்கள் வடமிழுக்க அலங்காரம் தான் சிரிக்க
ஆறுமுகன்! அருளவருகிறார்-அழகு
ஆறுமுகன் அருளவருகிறார்

மங்கையர் கும்மிகோல் ஆட்டங்கள் ஆடிட
மங்கள வாத்திய கானம் முழங்கிட (பாலை)

அழகுக்கு அழகான அழகு வடிவேலனவன்
உலகத்தைக் காக்க வருகிறார் - இந்த
உலகத்தைக் காக்க வருகிறார்

சக்தியின் திருமகன் வெற்றியைத் தருபவன்
இத்தரை எங்கிலும் இன்பமாய் இனிப்பவன் (பாலை)

கலியுக வரதனவன் கண்கண்ட தெய்வமவன்
நலிவோரை காக்க வருகிறார்-துயரில்
நலிவோரை காக்க வருகிறார்

மண்ணோரும் விண்ணோரும் வாழ்த்தி வணங்கிட
எண்ணில்லா இன்பங்கள் எங்கும் நிறைந்திட
(பாலை)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருக்கோணமலை பாலையூற்று

# அருள்மிகு ஸ்ரீ பாலசுப்பிரமணியப் பெருமான்

# காவடிப் பாடல்கள்

கற்பகத்தின் தருவாக திகழுமெங்கள்
கணபதியே உந்தனது கருணை கொண்டு
பற்பலரும் போற்றுமுயர் பாலையூற்று
பதியிலுறை பாலசுப்பிரமணியர் மீது
அற்புதமாய் பாடல்களை அடியேன் பாட
அழகு தமிழ் வார்த்தை பொருள் வந்து சேர
நற்குஞ்சரக் கொழுந்தான நாதா உந்தன்
நல்லருளை தந்தெனக்கு அருள் செய்வாயே (1)

காலையிளம் கதிர்போல கண்ணை ஈர்க்கும்
கட்டழகு குறையாத குமார வேலா
சோலையிளம் வள்ளியினைக் கரம்பிடிக்க
சுடராகக் கானகத்தில் நின்ற தேவா
ஆலைகளும் சாலைகளும் சிறந்திருக்கும்
அழகான கோணேஸர் புகழிருக்கும்
பாலைமிகு பாலையூற்றுப் பதியில் வாழும்
பாசுப்பிரமணியப் பெருமானே அருள் செய்வாயே (2)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிட்டவரும் வினைதுயரை தடுத்து நின்று
திருபையினால் அடியவரை வாழ வைத்து
பட்டதெல்லாம் செழித்தோங்க மழையைத் தந்து
பசுமையுடன் வையகத்தில் வளங்களீந்து
தொட்டதெல்லாம் துலங்க வைக்கும் தூய உந்தன்
திருவடியை தினந்தொழுது வேண்டி வந்தேன்
மட்டில்லா பாலையூற்றுப் பதியில் வாழும்
பாலசுப்பிரமணியப் பெருமானே அருள் செய்வாயே
(3)

கீதங்கள் நாதங்கள் எல்லாமுந்தன்
கருணையருட் கடலான அமுதேயப்பா
வேதங்கள் விளக்கங்கள் யாவுமுந்தன்
வேல் தந்த ஞானத்தால் விளைந்ததப்பா
மாதங்கள் காலங்கள் அனைத்துமுந்தன்
மயிலாடும் அழகினிலே மாறுதப்பா
பாதம்பணி பாலையூற்றுப் பதியில் வாழும்
பாலசுப்பிரமணியப் பெருமானே அருள் செய்வாயே (4)

குருவாகி தத்துவங்கள் உரைத்த சீலா
குன்றுகளில் குடியமர்ந்த கருணை நாதா
உருவாகி வருகின்ற உலகைக் காக்கும்
உயர்வான கலியுக வரதா கந்தா
கருவாகி வருகின்ற கவிதைக்கெல்லாம்
களமான தமிழ்தந்த கங்கைபாலா
பெருமைமிகு பாலையூற்றுப் பதியில் வாழும்
பாலசுப்பிரமணியப் பெருமானே அருள் செய்வாயே
(5)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூத்தாடும் ஈசனது நெற்றிக்கண்ணில்
கொதித்தெழுந்த தீப்பொறியாய் குளத்தில் வீழ்ந்து
ஆத்தளாம்அம்பிகையின் அரவணைப்பில்
ஆறுமுகம் ஒன்றான அழகுரூபா
மூத்தவனாம் ஐங்கரனின் தம்பியாக
முத்தழகுப் பெருமானே வேண்டுகின்றேன்
காத்தருளும் பாலையூற்றுப் பதியில் வாழும்
பாலசுப்பிரமணியம் பெருமானே அருள் செய்வாயே (6)

கெட்டவரும் உன்னருளால் திருந்த வேண்டும்
கேடின்றி வாழ வழிகாட்ட வேண்டும்
முட்டவரும் பகை நெருப்பு மறைய வேண்டும்
மூதமிழர் உரிமையுடன் வாழ வேண்டும்
விட்டகுறை தொட்ட குறை விருத்தியாகி
வெற்றியுடன் சிறக்க வழி செய்ய வேண்டும்
திட்டமுள்ள பாலையூற்றுப்பதியில் வாழும்
பாலசுப்பிரமணியப் பெருமானே அருள் செய்வாயே (7)

கேட்டவர்க்கு கேட்ட வரம் கொடுக்கும் வேலா
கதியென்ற ஏழையெனைக் காண வா, வா
வாட்டமுடன் வாழுமிந்த வாழ்வை மாற்றி
வற்றாத வரங்கள் தர விரைந்து வா, வா
நாட்டமுடன் வருவோர்க்கு நலங்கள் நல்கும்
நாயகனே உனதடியை நாடி வந்தேன்
பாட்டுறும் பாலையூற்றுப் பதியில் வாழும்
பாலசுப்பிரமணியப் பெருமானே அருள் செய்வாயே (8)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கைதனிலே வேல் கொண்டு வினையழிப்பாய்
கந்தனென்று வருவோர்கள் கவலை தீர்ப்பாய்
நெய்தனிலே விளக்கேற்றி நெஞ்சில் வைத்து
நிதம் தொழுவோர் நலம் விளங்கக் கருணை செய்வாய்
பொய்தனிலே தினம்கிடந்து புண்ணாகாமல்
பொற்பாத கமலத்தைப் போற்றி வந்தேன்
மெய்யான பாலையூற்றுப்பதியில் வாழும்
பாலசுப்பிரமணியப் பெருமானே அருள் செய்வாயே (9)

கொண்டவனே பலநூறு பெருமையெல்லாம்
கொடுப்பவனே அடியவர்க்கு வரங்களெல்லாம்
கண்டவனே பலகோடி பக்தரெல்லாம்
காப்பவனே கலியுகத்தில் வையமெல்லாம்
தொண்டர் குலம் பலர்தேடும் தெய்வமான
தேவர்கள் தளபதியைத் தேடிவந்தேன்
வண்டமிழர் பாலையூற்றுப்பதியில் வாழும்
பாலசுப்பிரமணியப் பெருமானே அருள் செய்வாயே
(10)

கோயில்களும் சீர்வளமும் சூழ்ந்திருக்கும்
கோணமலை ஈசனருள் சேர்ந்திருக்கும்
தாயருளும் சேயருளும் நிறைந்திருக்கும்
தட்ஷணகைலாயமெனும் தலமிருக்கும்
தூயஉனை தொழுதேற்றிப் பாடிவந்தேன்
துணையாக வந்தெனக்குப் பாதை காட்டி
நேயமிகு பாலையூற்றுப்பதியில் வாழும்
பாலசுப்பிரமணியப் பெருமானே அருள் செய்வாயே
(11)

**ஆக்கம்:**
**கவிஞர் சோதிடர்**
**வி.சிகண்டிதாசன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொடிக்கவி

திருச்சிற்றம்பலம்

ஒளிக்கு மிருளுக்கும் மொன்றே விமென்று மேலிடியொன்
றொளிக்கு மெளினிமிருன ராதுன் ளுயிரக் குயிராய்த்
தெளிக்குமறிவு திகழ்த்துள் தேனுக் திரிமாத்தே
குளிக்கு முவிரருள் கூடும் படிக் கொடி கட்டினனே

பொருளாம் பொருளேது போதேது கண்ணே
திருமணம் வெளியே திரவே-தருளாளா
நீயுரவா வையமெலா நீயறியக் கட்டினேன்
கோபுர வாசற் கொடி

வாக்காலு மிக்க மனத்தானு மெக்காலுந்
தாக்கா துணாவரிய தண்மையனை - நோக்கிப்
பிறித்தறிவு தம்மிற் பிறியாமை தானே
குறிக்குருணல்கக் கொடி

அஞ்செழுத்து மெட்டெழுத்து மாறெழுத்து நாலெழுத்தும்
பிஞ்செழுத்து மேலைப் பொருவெழுத்தும் நெஞ்சழுத்திப்
பேசு மெழுத்துடனே பேசா வெழுத்தனையுங்
கூசாமற் காட்டக்கொடி

அந்த மலமறுத்திங் கண்மானவக் காட்டியதற்
கந்த அறிவை அறிவித்தல் -சிந்தறிவை
மாறாமல் மாற்றி மருவு சிவப்பேதென்றுங்
கூறாமல் கூறுங்கொடி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருப்பொற்சுண்ணம்

ஆனந்த மனோலயம்

(தில்லையில் அருளியது-அறுசீரிய விருத்தம்)

முத்துநல் தாழம்பூ மாலைதூக்கி
முளைக்குடந் தூபம்நல் தீபம்வைம்மின்
சக்தியும் சோமியும் பார்மகளும்
நாமகளோடுபல்லாண்டிசைமின்
சித்தியுங் கௌரியும் பார்பதியும்
கங்கையும் வந்து கவரிகொண்மின்
அத்தன் ஐயாறன் அம்மானைப்பாடி
ஆடப்பொற் சுண்ணம் இடித்துநாமே. 8

பூவியல் வார்சடை எம்பிராற்குப்
பொற்றிருச் சுண்ணம் இடிக்கவேண்டும்
மாவின் வடுவகி ரன்ன கண்ணீர்
வம்மின்கள் வந்துடன் பாடுமின்கள்
கூவுமின் தொண்டர் புறநிலாமே
குனிமின் தொழுமினெங் கோனெங்கூத்தன்
தேவியுந் தானும்வந்தெம்மையாளச்
செம்பொன்செய் சுண்ணம் இடித்துநாமே. 16



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுந்தர நீறணந் தும்மெழுகித்
தூயபொன்சிந்தி நிதிநிரப்பி
இந்திரன் கற்பகம் நாட்டியெங்கும்
எழிற்சுடர் வைத்துக் கொடியெடுமின்
அந்தார் கோன்அயன் தன்பெருமான்
ஆழியான் நாதன்நல் வேலன்தாதை
எந்தரம் ஆளுமை யாள்கொழுநற்
கேய்ந்த பொற்சுண்ணம் இடித்துநாமே.

காசணி மின்கள் உலக்கையெல்லாம்
காம்பணி மின்கள் கறையுரலை
நேசமுடைய அடியவர்கள்
நின்று நிலாவுக என்றுவாழ்த்தித்
தேசமெல்லாம் புகழ்ந் தாடுங் கச்சித்
திருவேகம் பன்செம்பொற் கோயில்பாடிப்
பாசவினையைப் பறிந்துநின்று
பாடிப் பொற்சுண்ணம் இடித்துநாமே. 32

அறுகெடுப்பார் அயனும்அரியும்
அன்றிமற்றிந்திர னோடமரர்
நறுமுது தேவர்கணங்களெல்லாம்
நம்மிற்பின் பல்லதெடுக்க வொட்டோம்
செறிவுடை மும்மதில் எய்தவில்லி
திருவேகம் பன்செம்பொற் கோயில்பாடி
முறுவற்செவ் வாயினீர் முக்கணப்பற்
காடப்பொற்சுண்ணம் இடித்துநாமே. 40


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலக்கை பலஒச்சு வார்பெரியர்
உலகமெலாம்உரல் போதாதென்றே
கலக்க அடியவர் வந்துநின்றார்
காண உலகங்கள் போதாதென்றே
நலக்க அடியோமை ஆண்டுகொண்டு
நாண்மலர்ப் பாதங்கள் சூடத்தந்த
மலைக்கு மருகனைப் பாடிப்பாடி மகிழ்ந்து
பொற்சுண்ணம் இடிந்தும்நாமே. 48

சூடகந் தோள்வளை ஆர்ப்ப ஆர்ப்பத்
தொண்டர் குழாமெழுந் தார்ப்ப ஆர்ப்ப
நாடவர் நந்தம்மை ஆர்ப்ப ஆர்ப்ப
நாமும் அவர்தம்மை ஆர்ப்ப ஆர்ப்பப்
பாடக மெல்லடி யார்க்கு மங்கை
பங்கினன் எங்கள் பராபரனுக்கு
ஆடக மாமலை அன்னகோவுக்
காடப் பொற்சுண்ணம் இடித்தும்நாமே. [illegible]

வாள்தடங்கண்மட மங்கைநல்லீர்
வரிவளை ஆர்ப்பவண் கொங்கைபொங்கத்
தோள்திரு முண்டந் துதைந்திலங்கச்
சோத்தெம்பி ரானென்று சொல்லிச்சொல்லி
நாட்கொண்ட நாண்மலர்ந் பாதங்காட்டி
நாயிற் கடைப்பட்ட நம்மையிம்மை
ஆட்கொண்ட வண்ணங்கள் பாடிப்பாடி
ஆடப் பொற்சுண்ணம் இடித்தும்நாமே. 64



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வையகம் எல்லாம் உரலதாக
மாமேரு என்னும் உலக்கை நாட்டி
மெய்யனும் மஞ்சள் நிறைய அட்டி
மேதகு தென்னன் பெருந்துறையான்
செய்ய திருவடி பாடிப்பாடிச்
செம்பொன் உலக்கை வலக்கைபற்றி
ஐயன் அணிதில்லை வாணனுக்கே
ஆடப்பொற்சுண்ணம் இடித்தும்நாமே.

முத்தணி கொங்கைகள் ஆடஆட
மொய்குழல் வண்டினம் ஆடஆடச்
சித்தஞ் சிவனொடும் ஆடஆடச்
செங்கயற் கண்பனி ஆடஆடப்
பித்தெம் பிரானொடும் ஆடஆடப்
பிறவி பிறரொடும் ஆடஆட
அத்தன் கருணையொ டாடஆட
ஆடப்பொற்சுண்ணம் இடித்தும்நாமே.

மாடு நகைவாள் நிலாவெறிப்ப
வாய்திறந் தம்பவ ளந்துடிப்பப்
பாடுமின் நந்தம்மை ஆண்டவாறும்
பணிகொண்ட வண்ணமும் பாடிப்பாடித்
தேடுமின் எம்பெருமானைத்தேடி
சித்தங் களிப்பத் திகைத்துத்தேறி
ஆடுமின் அம்பலத் தாடினானுக்
காடப்பொற்சுண்ணம் இடித்தும்நாமே. ௪௮

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மையமர் கண்டனை வானநாடர்
மருந்தினை மாணிக்கக் கூத்தன்தன்னை
ஐயனை ஐயர்பிரானைநம்மை
அகப்படுத் தாட்கொண் டருமைகாட்டும்
பொய்யர் தம் பொய்யனை மெய்யர் மெய்யைப்
போதரிக் கண்ணிணைப் பொற்றொடித்தோள்
பையர வல்குல் மடந்தைநல்லீர்
பாடிப் பொற்சுண்ணம் இடித்தும்நாமே. 9

மின்னிடைச் செந்துவர் வாய்க்கருங்கண்
வெண்ணகைப் பண்ணமர் மென்மொழியீர்
என்னுடை ஆரமுதெங்களப்பன்
எம்பெருமான் இம வான்மகட்குத்
தன்னுடைக் கேள்வன் மகன்தகப்பன்
தமையன்எம் ஐயன் தாள்கள் பாடிப்
பொன்னுடைப் பூண்முலை மங்கைநல்லீர்
பொற்றிருச்சுண்ணம் இடித்தும்நாமே. 10

சங்கம் அரற்றச் சிலம்பொலிப்பத்
தாழ்குழல் சூழ்தரு மாலையாடச்
செங்கனி வாயிதழுந்துடிப்பச்
சேயிழை யீர் சிவலோகம் பாடிக்
கங்கை இரைப்ப அராஇரைக்குங்
கற்றைச் சடைமுடி யான்கழற்கே
பொங்கிய காதலிற் கொங்கை பொங்கப்
பொற்றிருச்சுண்ணம் இடித்தும்நாமே. 11



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஞானக் கரும்பின் தெளிவைப் பாகை
நாடற் கரிய நலத்தை நந்தாத்
தேனைப் பழச்சுவை ஆயினானைச்
சித்தம் புகுந்துதித் திக்கவல்ல
கோனைப் பிறப்பறுத் தாண்டுகொண்ட
கூத்தனை நாத்தழும் பேறவாழ்த்திப்
பானல் தடங்கண் மடந்தைநல்லீர்
பாடிப்பொற்சுண்ணம் இடித்தும்நாமே. 120

ஆவகை நாமும் வந்தன்பர்தம்மோ
டாட்செய்யும் வண்ணங்கள் பாடிவிண்மேல்
தேவர் கனாவிலுங் கண்டறியாச்
செம்மலர்ப் பாதங்கள் காட்டுஞ் செல்வச்
சேவகம் ஏந்திய வெல்கொடியான்
சிவபெரு மான் புரஞ் செற்றகொற்றச்
சேவகன் நாமங்கள் பாடிப்பாடிச்
செம்பொன் செய்சுண்ணம் இடித்தும்நாமே. 128

தேனக மாமலர்க் கொன்றைபாடிச்
சிவபுரம் பாடித் திருச்சடைமேல்
வானக மாமதிப் பிள்ளைபாடி
மால்விடை பாடி வலக்கையேந்தும்
ஊனக மாமழுச் சூலம்பாடி
உம்பரும் இம்பரும் உய்யஅன்று
போனக மாகநஞ் சுண்டல்பாடிப்
பொற்றிச்சுண்ணம் இடித்தும்நாமே. 136



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அயன்தலை கொண்டுசெண்டாடல்பாடி
அருக்கன் எயிறு பறித்தல்பாடி
கயந்தனைக் கொன்றுரி போர்த்தல் பாடிக்
காலனைக்காலால் உதைத்தல்பாடி
இயைந்தன முப்புரம் எய்தல் பாடி
ஏழை அடியோமை ஆண்டுகொண்ட
நயந்தனைப் பாடிநின் றாடியாடி
நாதற்குச் சுண்ணம் இடித்தும்நாமே 144

வட்டமலர்க்கொன்றை மாலைபாடி
மத்தமும்பாடி மதியம்பாடிச்
சிட்டர்கள் வாழுந்தென் தில்லைபாடிச்
சிற்றம் பலத்தெங்கள் செல்வம்பாடிக்
கட்டிய மாசுணக்கச்சைப் பாடிக்
கங்கணம் பாடிக் கவித்தகைம்மேல்
இட்டுநின் றாடும் அரவம்பாடி
ஈசற்குச்சுண்ணம் இடித்தும்நாமே. 152

வேதமும் வேள்வியும் ஆயினார்க்கு
மெய்ம்மையும் பொய்ம்மையும் ஆயினார்க்குச்
சோதிய மாய் இருள் ஆயினார்க்குத்
துன்பமுமாய் இன்பம் ஆயினார்க்குப்
பாதியு மாய் முற்றும் ஆயினார்க்குப்
பந்தமு மாய் வீடும் ஆயினார்க்கு
ஆதியும் அந்தமும் ஆயினார்க்கு
ஆடப்பொற்சுண்ணம் இடித்தும்நாமே. 160


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அனுசரணையாளர்கள்

**ரெட்டைமன் விளையாட்டுக்கழகம்**

**கோவிலடி, பாலையூற்று.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org